ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ மார்கழி௴ பகுதி ௧௨.

Vol. 8. December & January 1931. & 1932. **No. 12.**

பன்மணித்திரள்.

——:0:——

ஓர் நல்ல மருந்து.

மருந்து, வாத பித்த சிலேட்டுமங்களாலுண்டாகும் வியாதிகளைப் போக்குவது. ஆதலால் இது உலகமாந்தர்கட்குத் தம்சரீரத்தில் தோன்றித் துன்புறுத்தும் வியாதியைநீக்கிச் சுகமுறச்செய்வதற்குப் பெரிதும் சாதனமாயிருக்கும். இத்தகைய சாதனமாயும், ஔஷதிவடிவாயுமுள்ள மருந்தைப்பற்றி இங்கு விரித்துரைக்கத் தொடங்கவில்லை. மரணம் என்ற ஒன்றே இங்கு நல்ல மருந்தென்று சொல்லப்பட்டது. மருந்து தேகத்திலுள்ள வியாதியைப்போக்கும். இந்தமருந்து அஹங்காரமுதலிய துர்க்குணங்களையகற்றுமாதலால் நல்லமருந்தென்று விசேடித்துரைக்கப்பட்டது.

மேலும் உலக மாந்தர்கட்கு நீர் நெருப்புக் காற்று முதலியவைகளைப்போல இதுவும் பெரிதுந் துணையாயிருக்கும். இந்த மரணமில்லாவிடில் பரிகரிக்கமுடியாத துஷ்டஜந்துக்களாலும், கிருமி கீடக முதலியவற்றாலுமுண்டாகின்ற துன்பங்கட்கு அளவுண்டோ?

அறிவீனர்கள் மரணத்தைக்கண்டு நடுநடுங்குகின்றனர். அக்காலத்திலுண்டாகின்ற பெருமூச்சு சன்னி முதலியவை பெரிதும் பயங்கரத்தை விளைவிக்கும். ஞானிகள் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்து மகிழ்வடைவார்கள். கந்தல் வஸ்திரத்தை நீக்கி

நல்லவுடையைத் தரித்துக்கொள்வது போலவும், குடிசையைவிட்டு அரண்மனையையடைவது போலவும், பாஞ்சபௌதிகமாயும் அழியு மியல்புடையதாயுமுள்ள சரீரத்தைவிட்டு இறைவனுடைய சாயுஜ்ய பதவியையடைவதற்கு இந்த மரணம் உறுபெருந் துணையாயிருக் கும். இதன் தத்துவத்தையறியாத குறையே அறிவீனர்கள் இதை னக்கண்டு நடுங்குவதற்கு முக்கிய காரணமாகும். உலகத்திற் பிறந்த எல்லாருடைய தலையின்மீதும் இந்த மரணம் குடிகொண் டிருக்கிறது.

உலகத்தில் 'நாம் நிலைத்திருப்போம்' என்ற உணர்வையும், இதன்காரணமாக வுண்டாகின்ற கெட்ட எண்ணத்தையும், அத னல் தோன்றுகின்ற கெட்ட வொழுக்கங்களையும் விட்டொழிக்கும் படி மரணமே எல்லோர்க்கும் உபதேசிக்கிறது. இதைச்சிறந்த ஒரு குருவாகவும் சொல்லலாமன்றே.

இந்த மரணமென்ற பேரச்சமொன்றில்லாவிடில் பலர் தர்மா நுஷ்டானங்களையும், தெய்வபக்தியையும் விட்டொழித்து உலகத் திற்குப் பெருந்துயரை விளைவிப்பார்கள்.

ஹிரண்ய ராவணாதியர் தபசினல் ஆயுள்விருத்தியைப் பெற்ற வராதலால் உலகினர்கட்கு எவ்வளவு இடுக்கணைச் செய்தார்கள். மரணமென்பதொன்றுண்டு என்று நெஞ்சிற் படாததினலன்றோ இவர்கள் இங்ஙனந் துன்புறுத்தினர்கள். இந்த மரணத் துன்ப மில்லாவிடில் உலகில் * நிரீசுவரவாதம் பரவிவிடும். இது பரவினல் தர்மம் தலைகாட்டாது. இதனல் உலகிற்குண்டாகின்ற சங்கட மிவ்வளவென்று அளவிட்டுச் சொல்லலாகுமோ?

திருவடி (ஹநுமான்) இராவணனது கோட்டையின் பெருமை யைக்கண்டு "கறங்கு கால்புகா கதிரவனொளிபுகா மறலி, மறம்புகா தினு வானவர்புகா ரென்கைவம்பே, திறபுகாலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா, அறம்புகாதிந்த வணிமதிட்கிடக்கை நின் றகத்தின்" என்றுரைத்தனர். இங்குச் சுழல்காற்றும், சூரியனு டைய உக்கிரகிரணமும், யமனது ஆக்ஞையும், இந்த மதிலகத்து

* நிரீசுவரவாதம்-தெய்வமில்லையென்று வாதிக்கும் வாதம்.

நழையமாட்டாவென்ருல், இது இராமபாணத்திற் கிலக்காகி அழிவடையுமோவென்று திருவடி தமக்குள் ஐயுற்ருர். அதன்பிறகு இந்தக்காற்று முதலியன நழையாதிருப்பனபோல தருமமும் நழையாதிருக்குமாதலால் இது அழிவடையுமென்று தெளிவுற்ருர். இதனுல் தருமமென்பது நடையாடாதிருக்கின்ற காலத்தில் உலகத்தினது நிலை கெடுமென்பது விளங்கும்.

மரணமொன்றன்றே ஓராசார்யன் போலவிருந்து சிறந்த தருமத்தை மறவாதிருக்கும்படி கற்பிக்கிறது ஆதலால் இதனை ஈண்டு நல்லமருந்தென்று நிரூபிக்கலாயிற்று.

அச்சம் நீங்குவதெப்படி ?

அச்சமென்பது பிறப்பச்சம் சாவச்சம் பிணியச்சம் பகையச்ச முதலாகப் பல்வகையான் எண்ணப்படும். உலகத்தில் தோன்றிய எல்லோரும் மேற்குறிப்பிட்ட அச்சங்களுள் ஏதேனுமொன்ருல் வருந்துவர் இந்த அச்சம் நீங்குவதற்கு ஏதேனும் வழியுண்டா? இல்லையா ? என்று ஆராயவேண்டியது கடமையாகும்.

உலகத்தில் எல்லாச் சுகங்களையுமடைதற்கும், நினைத்தகாரியத்தை முடிப்பதற்கும் பொருளே சிறந்த சாதனமாகவிருப்பதால் அப்பொருளால் எல்லா அச்சங்களையும் அகற்றிக்கொள்ளலாமோ என்று ஆராய்ந்துபார்த்தால் அதனுலும் அகற்றிக்கொள்ள முடியாதென்பது தெளிவாக அறியலாம்.

பொருளை மிகுதியாக ஈட்டிக்கொள்ளவேண்டுமென்ற விருப்பமுடையவர்களும் அவர்கள் விரும்பியவாறே அதனையடைதற்கு முடியவில்லை. பொருளைப் பெற்றிருப்பவர்களும் அச்சமற்றிருக்கிருர்களோவென்ருல் அதுவுமில்லை. பொருளுடையவர்கள் மரிக்காதிருக்கின்ருர்களா ? வியாதியால் வருந்தாதிருக்கின்ருர்களா ? இல்லையே. அங்ஙனமாம்போது பொருளால் அச்சமகலுமென்பது பொருந்தாதன்றே.

தத்தம் சாமர்த்தியத்தால் அச்சங்களை யகற்றிக்கொள்ளலாமா ? என்று ஆராய்ந்தாலும் அதனுலுமுடியாதென்பதே தோற்

றுகிறது. எல்லோரும் கர்மவசப்பட்டவர்களாதலால் தாம்நினைத்த படியே யெல்லாம் செய்துமுடிப்பதற்குச் சக்தியற்றவர்களாயிருப் பரென்பது உலகிற்கண்டது. ஆதலால் தம் சக்தியால் அச்சங் களையகற்றிக்கொள்வதென்பது எப்படி ?

குழந்தைகளுக்கு அச்சமுண்டானபோது தாயின் மார்பை யணைந்துகொண்டு அக்குழந்தைகள் அச்சத்தையகற்றிக் கொள் கின்றன. அதுபோல எங்கும் நிறைந்து விளங்குகின்றவனும், எல்லாவகையான உறவினனும், எல்லாம் வல்லவனும், எல்லா மறிந்தவனுமிருக்கின்ற ஸர்வேசுவரனையடைந்தே அச்சத்தையகற் றிக்கொள்ளவேண்டும். கண்ணன் கீதையிலும், அறிஞர்கள் என்னை யடைந்தே கடப்பதற்கரிய மாயையினின்று விடுபடுகிறார்கள் என்று அருளிச்செய்தான்.

காதம்பலவுந் திரிந்துழன்றேற் கங்கோர்
  நிழலில்லை நீருமில்லை யுன்
பாதநிழலல்லால் மற்றோருயிர்ப்பிடநா
  னெங்குங் காண்கின்றிலேன்

தூதுசென்றாய் குருபாண்டவர்க்காய
  ங்கோர் பொய்ச்சுற்றம் பேசிச்சென்று
பேதஞ்செய்தெங்கும் பிணம்படுத்தாய்
  திருமாலிருஞ் சோலையெந்தாய்.

என்று பெரியாழ்வார், நெஞ்சுக்கும் கண்ணுக்கும் எட்டின விடமெல்லாம் அலமந்து திரிந்தவிடத்தும் ஸம்ஸாரத்துக்குள் அல மாராதவிடமில்லை, படாத கிலேசமில்லை; அவ்விடத்தில் ஒரு நிழ லாதல், துளி நீராதல் கண்டிலேன். உண்டானால் கானல் நீரேயாம். பின்னை யெது நிழலென்றாலோ இறைவனாகிய உனது திருவடி நிழ லேதான் எனக்குத் தஞ்சம். இந்தத் திருவடிநிழலில் ஒதுங்கி மூச்சுவிடுவதைத்தவிர வேறோரிடம் எங்கும் கண்டிலேன். உனது திருவடியைப்பற்றி நின்றதனாலன்றோ பாண்டவர்கட்குத் தூது சென்று அவரது குறையினை முடித்துவைத்தாய் என்று அருளிச் செய்தார்.

இதனால் அச்சமகனுதற்கு எம்பெருமான் திருவடியையடைவதே சாதனமாமேயன்றிப் பிறிதொன்றும் சாதனமாகாதென்பது தெளிவாயிற்று.

வெற்றிதருவதெது?

உலகத்திலுள்ளவர்கட்கு நன்மையையே போதிப்பதற்கெழுந்த வேதமானது ஜயத்தைத்தருவதெது? என்று விசாரித்துச்சென்று முடிவாக "ஸத்யமேவஜயதி" ஸத்யமே எப்பொழுதும் ஜயத்தைப் பெறுகிறது என்றுரைத்தது. பிறிதொன்றும் வெற்றியைத்தருவதில்லை என்ற கருத்தால் "ஸத்யமேவ" என்றது. ஸத்யம் என்ற சொல 'ஸத்' என்னும் தாதுவினடியாகப் பிறந்தது, 'ஸத்' என்பதற்கு உள்ளது என்று பொருள். உண்மை மெய் ஸத்யம் என்பன ஒருபொருளைக் குறிப்பிடுகின்ற சொற்கள். எல்லாந் தன்னிடத்தில் ஒடுங்கித் தான் எப்பொழுதும் உளனுகியிருப்பவன் ஸர்வேசுவரனுதலால் அவனை ஸத்தென்ற சொல்லாலும் வழங்குவர்.

ஒருவன் உண்மை சொல்வதையே பெரும்பயனுக மதித்து அதனைக்கையாண்டு வருவானுகில் அவன் எல்லா லோகங்களையும் ஜயித்துவிடுவான. அவனுலடையப்பெருத புகழொன்றுமில்லை. இந்த ஸத்யமே எல்லா விரதமும் வேள்வியுமாம். "இம்மை அம்மை வீடென மறைபுலங்கொளவிளம்பும் மும்மையுந்தரும்" என்றபடி எல்லாப் பலன்களையும் இது கொடுக்கும். அரிச்சந்திரன் முதலானவர்கள் இதனைக்கையாண்டு பெறுதற்கரிய புகழைப்பெற்ருர்களென்பது பிரஸித்தி. "எவர் சுயநலத்தைவிட்டுப் பொதுநலத்திற்குப் பாடுபட ஸத்தியத்தையே கொடியாகக் கொள்கின்றனரோ அவரை அது அலங்கரிக்கும்; ஸத்தியத்திலும் சிறந்தது ஒன்றுமில்லை; ஸத்தியத்தின் அணுவை ஒரு துலாத்தட்டிலும ஆயிரம் அசுவமேதயாகபலனை ஒருதட்டிலும்வைத்து நிறுத்தால் அணுருபமான ஸத்தியம்வைத்த தட்டே கனத்திருக்கும்; ஆதலால் ஸத்தியத்தையே விரும்பி வணங்குவீர்களாக; அது எப்பொழுதும் உங்கள் பக்கத்திலிருந்துகொண்டு புனிதமாக்கும்" என்று பார்த்திலும் சொல்லப்பட்டுளது. இது விலையற்ற செல்வமாகும். இதைக் கொண்டவர்களின் பாக்கியமே பாக்கியம்.

ஸத்தியத்தையே உண்மையாகக் கையாண்டுவர வல்லனுயின் அவன் பிறிதோர் அறத்தைச் செய்யவேண்டியதில்லை என்பதனைத்

திருவள்ளுவரும் "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" எனறுரைத்தனர். ஆதலால எவர்க்கும் வெற்றியைத்தருவது ஸத்யமென்பது பெறப்படும்.

ஆத்ம ப்ராப்தி.

அஃதாவது—கைவல்ய மோக்ஷத்தை யடைவதாம். எந்தத் தேசத்தில் போனவனுக்கு ஆத்மாநுபவமுண்டாகிறதோ அந்தத் தேசம ஆத்மப்ராப்தியெனப்படும். அஃதாவது—கைவல்யம். இதனை ஆத்மாநுபவமென்றும் வழங்குவர். இந்தக்கைவல்யஸ்தானமானது விரஜாநதிக்கு அக்கரையில அந்த நதிக்கரைக்கும் அப்பாலுள்ள பரமபதத்திற்கும் நடுவில ஓர் பாகத்திலுள்ளது. இது விரஜாநதிக் கப்பாலுள்ளதாகையால் இவவிடத்திற் சென்றவர்கள் மீள்வதில்லை.

சிலர் இதனை, 'பிரமாண்டத்துக்குள் ஓர் பாகத்திலிருக்கிறது; மோக்ஷத்திற் சேர்ந்ததில்லை; இதையடைந்தவர் சிலகாலம் இந்தக் கைவல்யத்தில ஆத்மாநுபவஞ்செய்துகொண்டிருந்து பின்னர் ஸம் ஸாரத்திற் பிறவியற்றவர்களாய் அங்கிருந்து அர்ச்சராதிமார்க்க மாகப் பரமபதத்தையடைவார்கள்' என்பர். இவர்கள் உரைப்பது பிரமாண விரோதமாமென்பது இங்கு விளக்கப்படும்.—

"ஸ்வாத்மாநுபூதிரிதி யாகில முக்தி ருக்தா" "ஸ்வாத்மாநு பூதிரிதி யாகில் முக்தி ருக்தா" என்று ஆத்மாநுபூதியென்கிற ஆத்ம ப்ராப்தியை முக்தி என்று கூரத்தாழ்வானும அருளிச்செய்தார். பட்டரும, "ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம்வா" "ஐச்வர்ய மக்ஷரகதிம் பரமம் பதமவா" என்று பிரமாண்டத்துக்குளடங்கிய தான எல்லா ஐசுவர்யங்களைக் காட்டிலும், பகவதநுபவ யோக்கிய மான பரமபதத்தைக்காட்டிலும் வேறாக 'அக்ஷரகதி' என்று அரு ளிச்செய்தார். "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு" "ஸம்ஸ்ருத்ய க்ஷர வைஷ்ணவாத்வஸு" என்று ஸம்ஸாரமென்று சொல்லப்படு கிற லீலாவிபூதியுட்பட எல்லா லோகங்களைக்காட்டிலும் வைஷ்ணவ ஸ்தானமான பரமபதத்தைக்காட்டிலும் வேறான 'அக்ஷரம்' என்று ஆளவந்தாரும அருளிச்செய்தார். "ஐஹலௌகிக மைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம், கைவல்யம் பகவந்தஞ்ச" "ஐஹலௌகிக மைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம், கைவல் யம் பகவந்தஞ்ச" என்று இம்மை மறுமை ஐசுவர்யங்களைக்காட்

டிலும், பகவதநுபவத்தைக்காட்டிலும் வேறான கைவல்யம் என்று பாஞ்சராத்திரத்திலுஞ் சொல்லப்பட்டுளது.

பெரியாழ்வாரும் "திருப்பல்லாண்டு" என்ற பிரபந்தத்தில் ஐசுவர்யார்த்தி முதலானவர்களை யழைக்கிறவிடத்தில், முன்னர் "வாழாட்பட்டு" என்பதில் ஆத்மாநுபவத்தில் விருப்புடையவரான கேவலர்களையழைத்தார். இவர்கள் ஆத்மப்ராப்தியை பெற்று விடுவார்களாகில், பிறகு எவ்வகையாலும் பகவதநுபவத்தைப் பெறுவதற்கு வழியில்லை. ஆதலால் இம்மோக்ஷம் பெரிதும் அநர்த்தகரமானது. இதிற்போய் மூழ்கின்றவர்களின் கதியைக்கண்டு பொறுக்கமாட்டாமல் காருண்யத்தால் இவர்களை முதலில் அழைத்தாரென்பது நன்கு விளங்கும்.

திருமங்கைமன்னன், 'திருநெடுந்தாண்டகத்தில் "இறப்பதற்கே யெண்ணாது" என்பதனால் கைவல்யமோக்ஷம் பகவதநுபவத்திற்கு அயோக்யமாம்; என்றருளிச் செய்தார். இதற்குப் பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த வியாக்கியானமும் இங்கறியத்தக்கது. அது வருமாறு:—"இறப்பதற்கேயெண்ணாது' இறக்கையாகிறது-மரிக்கை. மரணத்தையெண்ணாதே. ஷட்பாவ விகாரங்களில் தேஹாநுபந்தியான மரணத்தைச் சொல்லிற்று. இங்கு – ஸ்வரூபாநுபந்தியான மரணத்தைச் சொல்லுகிறது. அதாகிறது – கைவல்யம். ஸ்வதஸ்ஸங்கியான ஆத்மாவினுடைய அநுபவ ஸ்வரூபமாய்த் தனியே ஒரு புருஷார்த்தமாய்ப் புநராவ்ருத்தியில்லாத கைவல்யத்தை மரணமென்னக்கடவதோவென்னில்; மரணமாகிறது— ஆத்மவியோகமாக லோகத்திலே ப்ரத்யக்ஷியாநின்றதிறே; இதுவும் அப்படியே ஸாக்ஷாத் ஆத்மபூதனான பரமாத்மவியோகத்தாலே மரணமாகக்கடவது. ப்ரத்யக்ஷமாக ம்ருதமான சரீரம் நஷ்டமாகிறாப்போலே இது நசியாமையாலே இதை மரணமென்னலாமோவென்னில்; ஸ்வரூபாநுரூபமான போகமில்லாமையாலே பாஹ்ருதயததாலே மரணமாகக்கடவது. "[illegible]" "ம்ருதோ தரித்ர: புருஷ:" என்று போக்தாவானவன் தரித்திரனை ம்ருதனென்னுமாபோல இந்தக்கைவல்யம் அந்நாதனுக்கு மரணமாய்த் தோற்றுகையாலே மரணமென்கிறது".

இங்ஙனம் கூறிய ப்ரமாணங்களால் ஆத்மாநுபவ நிஷ்டனுக்கு ஸ்தானம் விரஜைக்கு அப்புறமென்பதும், அவனுக்குப் பகவதநுபவமில்லையென்பதும் விளக்கப்பட்டன. இதற்கு விரோதமாகக் கூறுகின்றவர்களின் பக்ஷம் சிறந்ததில்லையெனறறியத்தக்கது.

ஸ்ரீ:

மதிப்புரை.

—:o:—

மோக்ஷவழி:-யாவருமறிந்துகொள்ள தக்க சிறந்ததோர் நூலாம். திருமல்ராஜபுரம் ஜமீன்தார் ப்ரஹ்மஸ்ரீ நே. ஈ. வேங்கடேச சர்மா அவர்களே இந்நூலாசிரியராவர். அறம் பொருள் இன்பம் வீடென்ற நான்கு உறுதிப் பொருள்களிலும் வீடொன்றே அறச் சிறந்த புருடார்த்தமென்பர். உலக நூல்களொழிய ஞானநூல்களெல்லாம் மோக்ஷத்தைப் பெறுவதுதான் அறப்பெரிய பயனாகுமென்று ஒருமுகமாகவேயுரைக்கின்றன. இந்த மோக்ஷத்தைப் பெறுதற்குச் சாதனங்களும் அந்த நூல்களிற் செவ்வையாகவே உரைக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த நூல்களில் இச்சாதனம் இன்னின்ன முறையாகக் கூறப்பட்டுள்ளதென்று ஆய்ந்தறிகின்ற அருமை யாவர்க்குமுண்டு. அவ்வருமையை எளிமையாக்குவதற்கே ஆங்காங்கு பொதிந்துகிடந்த இந்த மோக்ஷசாதனங்களாகிய அரிய பொருள்களையெலலாம் இந்நூலாசிரியர் எடுத்து ஒருங்கு திரட்டி வெளியிட்ட அருமைப்பாடு போற்றத்தக்கதே. இதனை ஆய்ந்தாய்ந்து பயிலுமிடத்து இவ்வாசிரியரது நுண்ணறிவு புலனாகும். உலகநூல்களில் எத்துணையே நிபுணதையைப் பெற்றாலும் ஒருபயனுமில்லை. அதனால் பிறந்திறந்துழல்கின்ற பெருந்துன்பத்தை அகற்றவொண்ணாதென்பது ஒருதலை. உலகிற்பிறந்தவர்கள் மோக்ஷோபாயத்தையறியாது காலத்தை வாளா கழிப்பரேல் அவாகள் பிறந்ததனாலாய பயனைப் பெறாதொழிவார்கள். இதனால் மோக்ஷோபாய விசாரம் யாவருக்குமின்றியமையாததொன்றாமென்பது தெளிவு. இந்நூல், மோக்ஷோபாயத்தை விளக்குவதில் ஸித்தாஞ்சனம் போல்வதாம்.

இதில் மோக்ஷத்திற்கு நேரே சாதனங்களாகிய பக்தி பிரபத்திகளின் இயல்புகள் பேசப்பட்டுள்ளன. மேலும் இதற்குப் பரம்பராசாதனங்களாகிய சமம் தம முதலிய ஆத்மகுணங்களும் விளக்கப்பெற்றுள்ளன. மோக்ஷோபாயங்களை விரித்துரைத்துவருகிற முறையில் பிரசங்கமாக த்வைதாத்வைத விசிஷ்டாத்வைதமென்ற

மதத்ரய ஆராய்ச்சியும், புண்ணிய பாப இயல்புகளும், பிர்ம்ம வித்துக்களின் சீர்மையும், கற்புடையமாதரின் பெருமையும், விபசாரிகளின் கதியும் நவீனநாகரீகங்களும், நரகத்துன்பங்களும், ஆஹார நியதியும், பொருளீட்டி விநியோகங்கொள்ளும் முறைகளும், இதிகாசத்தின் உட்கருத்தும், தியானவிதிகளும் மற்றும் பிறவும் இதில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் யாவரும் விரும்பிப் பயிலத்தக்கதொன்றாகவே திகழ்கிறது.

லோகாநுபவங்களும் நிஷ்டையும்:—இந்நூலும் "மோக்ஷவழி" ஆசிரியராலே இயற்றப்பெற்றது. இதில் மோக்ஷவழியிலுரைக்கப் பெற்றவைகட்குப் பிரமாணங்கள் செவ்வனேயுரைக்கப்பட்டுள்ளன. மேலும், இதில் அநுஷ்டானமுறை மந்திரஜபக்கிரமங்கள் ஓங்காரத்தின் பெருமை காயத்திரியின் சீர்மை உபநிஷத்துக்களின் உயிர்ப் பகுதிகள் பஞ்சமகாயஜ்ஞத்தின் சிறப்பு அப்யாஸத்திறம் விருந்தினரை ஓம்புதலின் இன்றியமையாமை புருஷ ஸூக்தப் பெருமை பாராயணக் கிரமம் முமுக்ஷுக்களினியல்பு ப்ரணவத்தின் இலக்கணம் ப்ரஹ்மஜ்ஞானத்தின் சீர்மை முதலிய இவைபோன்ற இயைபுடையனவெல்லாம் பிரமாண பூர்வமாகச் செவ்வனேயுரைக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் 'தன்னெஞ்சிற்றோற்றினதேசொல்லி யிது சத்த வுபதேசவரலாறு' என்றுரைப்பார் பலருளர். இந்நூலாசிரியர் அங்ஙனமின்றிப் பிரமாண பரதந்த்ரராயிருந்து எடுத்தியம்புந் திறம் பாராட்டத்தக்கதே. இந்நூல் ஆஸ்திகாபிமானிகளனைவரும் வாங்கிப் பயிலத்தக்கதாகவே விளங்குகிறது.

இதன்விலை "மோக்ஷவழி" உட்பட ரூ 1. தபால் சார்ஜ் வேறு.

ஸம்ஸ்க்ருததமிழ் அகராதி — இந்நூலும் முன்னர்க்குறிப்பிடப் பெற்ற திருமலைராஜபுரம் ஜமீன்தார் ப்ரஹ்மஸ்ரீ கே. ஈ. வேங்கடேச சர்மா அவர்களால் இயற்றப்பெற்றது. முன்பொருமுறையும் இந்நூலின் உயிரெழுத்து முடிவாகவுள்ள பகுதிக்கு நம் திவ்யகரத்தில் மதிப்புரை எழுதப்பெற்றுளது. இப்பொழுது இந்நூல் முற்றுப் பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் பேரறிவாளரென்பதை இவரி

யற்றிய "மோக்ஷவழி" முதலிய நூல்கள்வாயிலாக நன்கறியலாம். அக்காலத்தில் குருகுல வாசஞ்செய்து வேதாங்க வேதாந்தங்களை ஐயந்திரிபறக்கற்று அவற்றைப் பிறருக்குக் கையிலங்கு நெல்லிக் கனிபோல் எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர்களாய் விளங்கினர்கள். இக்காலத்து அங்ஙனக்கேட்டுரைக்கு முறையருகிவிட்டதால் புஸ்தக வாயிலாகவே பெரும்பாலுந் தெரிந்துகொள்ளவேண்டிய நியமம் ஏற்பட்டுவிட்டது. அதனன் இவைபோன்ற நூல்கள் வேண்டற்பாலனவே. இதில் வேதாந்தங்களில் வழங்கப்பெற்ற கடின பதங்கட்கும், இன்றியமையாத வேறுபல பதங்கட்கும் பொருளெழுதப் பெற்றுள்ளதினல், இது ஆத்மார்த்தமாக ப்ரஸ்தானத்ரயத்தை அப்யஸிக்கப்புகும் லௌகிகர்கட்கும் பெரிதும் துணையாயிருக்கும். உலகவழக்கு, புலனெறி வழக்குகளிற் பயின்றுவரும் சொற்கட்கெல்லாம் பொருளுரைத்துச் செல்கின்ற நிகண்டு போலின்றி ஸாராம்சமான பதங்கட்கே பொருளெழுதப்பெற்றுள்ளதினல் ஸாரக்ராஹிகளா யிருப்பார்க்கெல்லாம் இது பெரிதும் பயனளிக்கவல்லது. தர்க்கம் வியாகரணம் சாஹித்யமுதலிய நூல்களைப் பயின்றுவருவார்கட்கும் ஏனையோர்கட்கும் உபகாரமாயிருக்கும். இந்நூலாசிரியர் பல நூல்களினுமுள்ள அரிய பல பதங்களையே ஆய்ந்தெடுத்துத் திரட்டியுள்ளாராதலால் மற்ற அகராதிகளைப் போல அதிக விலைகொடுத்து வாங்கவேண்டிய அருமைப்பாடுமில்லை. உலகத்திற் பெரும்பாலரும் பயின்றுள்ள க்ரந்தலிபியில் பதங்களெழுதித் தமிழுரைவரையப் பெற்றுள்ளதினல் இது யாவருக்கும் உபகாரமாகவேயிருக்கும். வேண்டுவோர் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

இதன் விலை ரூ. 5—0—0

விலாசம்:—

ஸ்ரீ. உ. வே. ரா. துரைசாமி ஐயங்காரவர்கள்,
பிரம்ம ஸாயுஜ்ய லைப்ரரி மானேஜர், நேமம் கிராமம்,
திருமழிசை போஸ்ட், வயா பூந்தமல்லி, செங்கற்பட்டு ஜில்லா.

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்:—இதற்குத் தெளிவான தமிழுரை யெழுதப்பெற்று ஒரு நூல் வெளிவந்துள்ளது. சென்னை ஸ்ரீமாந் அரங்கநாத முதலியார் (B. A.) அவர்கள் இதன் உரையாசிரியராவர். இக்காலத்தில் நல்வீட்டைப்பெற்று நலமுற்று வாழ்வதற்கு நாம சங்கீர்த்தனமே சிறந்த உபாயமாகுமென்று பெரியார் பணிப்பர். "ஆயிரநாமஞ்சொல்லி, பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே" என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்தார். இத்தகைய ஆயிரநாமத்தின் பொருளை எல்லோரும் நன்கறிந்து அநுஸந்தித்து உய்யவேண்டும் என்ற நன்னோக்கத்துடன் இந்நூலாசிரியர் தம் சொந்தப்பொருட் செலவிட்டு இதனை அச்சிட்டு எல்லோருக்கும் இலவசமாகக் கொடுத்துதவுகிறார். இத்தகைய சிறந்த கொடையாளர் இக்காலத்தரியராவர். இவரது குணநலம் போற்றத்தக்கதே. மேலும், இவர் இதுபோன்ற உபகாரம் செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இப்பெரியார் நீண்டவாழ்நாளையும், நிறைந்த நற்செல்வத்தையும் பெற்றின்புறுமாறு எம்பெருமான் இன்னருள் புரிவானாக.

இந்நூல் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு இரண்டணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

ஆ. அரங்கநாத முதலியாரவர்கள், (B. A.)
"சுவர்ண விலாஸ்" 13, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ:

நன்கொடை.

நம் திவாகரத்திற்குப் பலர் ஸம்ரக்ஷகராகவும் போஷகராகவும் ஜீவித சந்தாதார்களாகவுஞ்சேர்ந்து உபகரித்த உபகாரநிதியே திவாகரம் இதுகாறும் நிலைபெற்றிருப்பதற்கும், இனிமேலும் நிலையுறுவதற்கும் அறிகுறியாயிருக்கும். ஆயினும் இதற்குப்போதிய நிதி சேரவில்லையாதலால் அபிமானிகளனைவரும் ஆயுட் சந்தாதார்களாகச் சேர்ந்தாதரிக்கவேண்டுமென்று பத்திரிகைவாயிலாகப் பன்முறை கேட்டுக்கொண்டுள்ளோம். அவ்வேண்டுகோளிற்கிணங்க, திருவல்லிக்கேணி ஸ்ரீமாந் ஆ. அரங்கநாத முதலியார் (B.A.) அவர்களும், சென்னபுரி ஸ்ரீமாந் வித்வான் விஷ்ணுபாதசேகரரவர்களும் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்து உபகரித்துள்ளார்கள். இவ்விருவருள் முதலியாரவர்கள் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்குத் தெளிபொருளெழுதி அச்சிட்டு எல்லோருக்கும் இலவசமாகக் கொடுத்துதவுகின்றாரென்பதனாலும், வித்வான் அவர்களும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வர்ணமாமலை ஸ்வாமி விஷயமாகப் பிரபந்தங்களியற்றி அச்சிட்டு எல்லோருக்கும் கொடுத்துதவுகின்றனரென்பதனாலும் இவ்விருவரது கொடையுளனும் புலமை நலனும் நன்கு விளங்கும். இவர்கள் நமது திவாகரம் நிலவுறச்செய்யவேண்டுமென்பதில் கருத்துடையவர்களாயுமிருக்கின்றார்கள். இவர்களது நற்குண நற்செயல்கள் பெரிதும் பாராட்டத்தக்கன. இவர்கள் நீண்டவாழ்நாளும், நிறைந்த செல்வமும்பெற்று எம்பெருமான் இன்னருட்குப் பாத்திரபூதராய் விளங்குவார்களாக.

ப. அ.